தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2015

ஆண்டு: 5 திகதி: 13.06.15

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி செ. சிவசுப்பிரமணியம்
திருமதி நி. இரவீந்திரராஜா
திருமதி ம. தில்லைநடேசன்

மாணவர் பெயர்: ______________________

1. **கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (20 புள்ளிகள்)**

உலகமே இசைவடிவானது. இசை தரும் இன்பத்தை அனுபவிக்காதவர் யாருமில்லை. எல்லோரையும் இசைய வைப்பதால் அது இசை என்று பெயர் பெற்றது. இசையானது எல்லா இடங்களையும் ஆட்சி செய்கிறது. அன்று முதல் இன்று வரை தமிழ் மக்களின் வாழ்க்கையே இசைமயமானது தான். குழந்தை பிறந்த போதே பாட்டும் பிறந்து விடுகிறது. அப்போது தாலாட்டுப் பாடுகிறோம். மனிதர்கள் இறந்தபோது ஒப்பாரிப் பாடல்கள் பாடப்படுகின்றன. இதற்கு இடையில் தான் எத்தனை பாடல்கள்? வயலில் வேலை செய்யும்போது பாடும் பாடல்களும், பொழுதுபோக்கு விழாக்களின் போது கும்மி கோலாட்டப் பாடல்களும் என்று எல்லா வேளைகளிலும் இசையோடு பாடல்களாகப் பாடப்படுகின்றன. இவை நாட்டுப்புறப் பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. முத்தமிழில் முதல் தமிழ் இசைத்தமிழே ஆகும்.

சிலப்பதிகாரத்திலே இசைக்குறிப்புகள் இருப்பதை அறியலாம். இது போன்ற தமிழ் நூல்கள் மூலம் குழல், யாழ் போன்ற இசைக் கருவிகளையும் இசைபாடும் முறையினையும் அறிய முடிகிறது. பாணர்கள் என்ற இசை வளர்த்த பரம்பரையினர் வாழ்ந்த ஊர்களில் ஒன்றாக இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் விளங்குகிறது. இவ்வாறான பெறுமதிமிக்க இசை, ஆரம்பக் கல்வியின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்று சில அறிஞர்கள் கருதுகின்றார்கள். இது திசைமாறிச் செல்லும் மாணவர்களைத் திருத்துவதற்கும் அவர்களை நல்ல குடிமக்களாக மாற்றுவதற்கும் உதவும் என்பது அவர்களின் கருத்து.

1. தமிழ் மக்கள் இசைப்பாடல்களைப் பாடும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

   ..........................................................................................

2. முத்தமிழில் முதல் தமிழ் எது?

   ..........................................................................................

3. தமிழரின் இசைக்கருவிகள் இரண்டின் பெயர் தருக?

...........................................................................................

4. இசைக் குறிப்பு காணப்படும் நூல் ஒன்றின் பெயர் தருக?

...........................................................................................

5. பாணர் என்ற இசைவளர்த்த மரபினர் வாழ்ந்த ஊர் ஒன்றின் பெயர் தருக?

...........................................................................................

**2. கீழே தரப்பட்ட சொற்களை வைத்து கோடிட்ட இடங்களை நிரப்புக. (10 புள்ளிகள்)**

| | | |
|---|---|---|
| தமிழ்க்கலைகள் | இரண்டாயிரம் | வரலாறு |
| கலாசாரம் | சேய்நாடு | தமிழ்மொழி |

ஈழத்தின் தமிழ்ப்பிரதேசத்தை ------------------------------ ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மன்னர்கள் ஆண்டார்கள். அதனால் ---------------------------- அங்கு வளர்ந்தது. ------------------------ வளர்ந்தன. தமிழர் ----------------------------- பரவியது. ஈழத்திற்கும் தென்னிந்திய தமிழ்நாட்டிற்குமிடையே நெடுங்காலத் தொடரபுண்டு. அதனால் தமிழ்நாடு தாய்நாடு என்றும் ஈழம் ----------------------------------- என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பின்வரும் வாக்கியங்களில் "போ" என்ற சொல்லைப் பாவித்து பொருத்தமான காலத்தில் மாற்றி எழுதுக. (10 புள்ளிகள்)**

உதாரணம்: நான் <u>நேற்றுப்</u> பாடசாலைக்குப் <u>**போனேன்.**</u>

1. கலாவும் வாணியும் நாளை ----------------------------------
2. அப்பா இன்று கன்பராவுக்குப் ----------------------------------

3. நான் நாளை அம்மாவுடன் ----------------------------------------------

4. கடந்த விடுமுறைக்கு நாங்கள் -----------------------------------------

5. ஒவ்வொரு வருடமும் பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலாவுக்காக பிறமாநிலங்களுக்குப் --------------------------------

**4. பிரித்து எழுதுக. (10 புள்ளிகள்)**

1. கருநிறம் - ----------------------------------------
2. மாலைநேரம் - ----------------------------------------
3. வனவிலங்கு - ----------------------------------------
4. தமிழ்ப்பாடம் - ----------------------------------------
5. வகுப்பறை - ----------------------------------------

**5. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக. (10 புள்ளிகள்)**

1. மாணவர்கள் தமிழ்மொழி (வாழ்த்து / வாள்த்து) பாடினார்கள்.
2. (என்னும் / எண்ணும்) எழுத்தும் கண்ணெணத் தகும்.
3. கன்பராவுக்குச் செல்லும் (வழியில் / வளியில்) கங்காருவைப் பார்த்தேன்.
4. விழா ஆரம்பத்தில் பிரதமவிருந்தினரின் ( உரை / உறை) இடம்பெற்றது.
5. மக்கள் திரைப்படத்தைப் பார்த்து ( இறசித்தனர் / இரசித்தனர்).

6. பின்வரும் தலைப்பில் ஒன்றைத் தெரிந்து 50 சொற்களுக்கு குறையாமல் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.(20 பள்ளிகள்)

- எனது பிறந்தநாள்
- நான் சென்ற கல்விச்சுற்றுலா

7. **பின்வரும் தலைப்பில் ஒன்றைத் தெரிந்து 15 வசனங்களுக்கக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக. (20 புள்ளிகள்)**

- தமிழர்கள் கொண்டாடும் ஒரு பண்டிகை
- தமிழ்ப்பாடசாலைக் கலைவிழா